கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.
2026ம் வருடம் மார்ச் மாதம் 06ம் தேதி வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.7/2025
மற்றும்
இடைநிலை மனு எண்.8/2025
இன்
R.L.T.O.P. எண்.11/2022
* * * *

அலமேலு ... மனுதாரர்/மனுதாரர்

/எதிர்/

வேல்ராஜா ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

இம்மனுக்களில் மனுதாரர்/மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரருக்கு எதிர்மனுதாரரை ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்து இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இந்த இரண்டு மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## **<u>பொதுவான உத்தரவு</u>**

மனுதாரர்/மனுதாரர் தரப்பில் CPC பிரிவு 151ன் கீழ் R.L.T.O.P No.11/2022 மனுவில் மனுதாரர் தரப்பில் முடிக்கப்பட்ட சாட்சியத்தை மீண்டும் re–open செய்யவும், மதுரை வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகம் துணை இயக்குநர் அவர்களை சம்மன் அனுப்பி சாட்சியமாக விசாரிக்க மனுதாரர்/மனுதாரருக்கு அனுமதியளித்து உத்திரவிட வேண்டி கட்டளை 16 விதி 1(2) மற்றும் 151 CPCன் கீழ் இந்த இரண்டு மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை</u>** :–

இந்நிர் மனுதாரர்/மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுக்களானது சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

1.1) மனுதாரர்/மனுதாரர் தரப்பில் R.L.T.O.P No.11/2022 மனுவில் மனுதாரர் தரப்பில் முடிக்கப்பட்ட சாட்சியத்தை மீண்டும் re–open செய்யவும், மதுரை வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகம் துணை இயக்குநர் அவர்களை சம்மன் அனுப்பி சாட்சியமாக விசாரிக்க

மனுதாரர்/மனுதாரருக்கு அனுமதியளித்து உத்திரவிட வேண்டியும் இந்த இம்மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) எதிர்மனுதாரர் தரப்பில், இம்மனு இவ்வழக்கை காலதாமதம் செய்யும் நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இவ்வழக்கை பிரதிவாதி தரப்பு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) தீர்வு</u>**

இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலினை செய்யப்பட்டது. இருதரப்பிலும் இம்மனுக்களை நிரூபணம் செய்யும்பொருட்டு சாட்சி, சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

3.1) அசல் மனுவை பரிசீலனை செய்கையில், அசல் மனுவானது மனுச்சொத்திலிருந்து எதிர்மனுதாரர்/வாடகைதாரரை சுவாதீனத்திலிருந்து வெளியேற்றி காலி சுவாதீனமாக மனுதாரர்/நிலச்சுவான்தாரர் வசம் நீதிமன்ற நிர்ணயம் செய்யும் கால அவகாசத்திற்குள் எதிர்மனுதாரர்/வாடகைதாரர் காலி சுவாதீனம்

ஒப்படைக்க உத்தரவிட கோரியும், மனுச்சொத்திற்கு எதிர்மனுதாரர்/வாடகைதாரர், மனுதாரர்/நிலச்சுவான்தாரருக்கு செலுத்த வேண்டிய வாடகை பாக்கி தொகை ரூ.80,200/-ஐ செலுத்த உத்தரவிட கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2) அசல் மனு கடந்த 2022ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது. மேலும், மனுதாரர் தரப்பில் சாட்சி விசாரணை செய்யப்பட்டு சான்றாவணங்கள் குறியீடு செய்தும், குறுக்கு விசாரணை செய்தும், மனுதாரரின் சாட்சியம் முடிந்த நிலையிலும், எதிர்மனுதாரர் தரப்பிலும் சாட்சி விசாரணை செய்யப்பட்டு, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, குறுக்கு விசாரணையும் முடிவுற்ற நிலையில், 06.08.2025ம் தேதி இருதரப்பு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்தது. இந்நிலையில், இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.3) மேலும் இம்மனுக்களில், மதுரை வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகம் துணை இயக்குநர் அவர்களை சம்மன் அனுப்பி சாட்சியமாக விசாரிக்க வேண்டும் என்றும், அதற்காக மனுதாரர் தரப்பில் முடிக்கப்பட்ட சாட்சியத்தை ரீ-ஓப்பன் செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர் தரப்பில், அசல் மனுவில்

மதுரை வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகம் துணை இயக்குநர் அவர்களை விசாரணை செய்வதற்கான சரியான சட்டப்படியான காரணங்கள் எதுவும் தெரிவிக்கவில்லை. எனவே, மதுரை வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகம் துணை இயக்குநர் அவர்கள் நீதிமன்றத்தில் சாட்சியாக சாட்சியமளிக்க வேண்டியது சட்டப்படியானது என்பதை மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்பதாலும், அசல் மனுவானது 2022ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது என்பதை கருத்தில் கொண்டும், இம்மனுக்களானது அசல் மனுவின் காலதாமதத்தை ஏற்படுத்தும் விதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தை கருத்தில் கொண்டும், இம்மனுக்கள் சட்டப்படி நிலைத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த இரண்டு இம்மனுக்களானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 06.03.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2026.03.06 15:05:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

**இணைப்பு:-**

**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2026.03.06 15:05:43 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.7/2025
மற்றும்
இடைநிலை மனு எண்.8/2025
இன்
R.L.T.O.P எண்.11/2022
பொது வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 06.03.2026.